தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# அரியலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(17.07.2021 முதல் 21.07.2021)

அறிக்கை எண்: 57/2021 தேதி 16.07.2021

## அரியலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33 °செ முதல் 35 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 °செ முதல் 27 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## அரியலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (17.07.2021 முதல் 21.07.2021)

| கடந்த வார வானிலை (13.07.2021 முதல் 15.07.2021) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (17.07.2021 முதல் 21.07.2021) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 13/07 | நாள்-2 14/07 | நாள்-3 15/07 | தேதி | நாள்-1 17/07 | நாள்-2 18/07 | நாள்-3 19/07 | நாள்-4 20/07 | நாள்-5 21/07 |
| 0 | 0 | 12.8 | மழை (மி.மீ.) | 2 | 15 | 6 | 0 | 3 |
| 33 | 33 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 36 | 36 | 36 | 37 | 37 |
| 26 | 26 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 26 | 25 | 26 | 26 |
| 7 | 7 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 7 |
| 68-61 | 62-77 | 77-56 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 85-50 | 85-50 | 85-50 | 85-50 | 85-50 |
| 17 | 24 | 19 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 20 | 20 | 20 | 20 | 20 |
| மேற்கு | வட மேற்கு | மேற்கு | காற்றின் திசை | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

## அரியலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 17.07.2021, 18.07.2021, 19.07.2021 மற்றும் 21.07.2021 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 36 °செ முதல் 37 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ முதல் 26 °செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

- ✓ தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக குருத்து ஈ யின் தாக்கம் சோளத்தில் அதிகம் ஏற்படக் கூடும். எனவே இதனைக் கட்டுப்படுத்த டைமீத்தோயட் 30 EC 500 மிலி / ஏக்கர் என்ற அளவில் தெளிக்கவும்.

- ✓ தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தக்காளியில் வெள்ளை ஈ யின் தாக்கம் தென்படுகிறது. தனைக் கட்டுப்படுத்த மஞ்சள் நிற ஒட்டும் பொறியை எக்டருக்கு 12 வீதம் வைத்து கட்டுப்படுத்தவும்.

- ✓ தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக வாழையில் குருத்து சுருட்டு அழுகல் நோயின் தாக்கம் ஏற்படக்கூடும். எனவே இதனைக் கட்டுப்படுத்த மேங்கோ செப் 75% WP @ 1.5 – 2.0 கிலோ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும்

- ✓ விவசாயிகள் ஆடு மற்றும் செம்மறி ஆடுகளின் உற்பத்தியை மேம்மடுத்த குடல் புழு நீக்கம் மற்றும் உண்ணிகளை நீக்கம் செய்ய அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அனுகவும். ஆட்டு கொட்டைகளில் தாது ஊப்பு கட்டியை கட்டி வைக்கலாம்.

## குறுஞ்செய்தி

- ✓ தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக வாழையில் குருத்து சுருட்டு அழுகல் நோயின் தாக்கம் ஏற்படக்கூடும். எனவே இதனைக் கட்டுப்படுத்த மேங்கோ செப் 75% WP @ 1.5 – 2.0 கிலோ எக்டர் என்ற அளவில் தெளிக்கவும்

**இயக்குநர்**